நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 50/2022

அரசு தரப்புக்காக அ. சா.2 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அப்பு என்கிற பிரகாஷ் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 2 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on
23rd day of July 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.23 )

நான் தற்போது பண்ருட்டியில் வசித்து வருகிறேன். நான் ஐடிஐ படித்துள்ளேன். வழக்கில் இறந்துபோன தமிழ் என்கிற செங்கேனி எனது சித்தி. அ.சா.1 எனது சித்தியின் மகள். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்ன பிரச்சனை என்று தெரியாது. 26.09.2021 தேதி அன்று எனது சித்தி தமிழ் என்கிற செங்கேனியின் எதிர் வீட்டில் வசிக்கும் பிருந்தா என்பவர் எனது சித்தியை அடித்து விட்டதாக நான் கேள்விப்பட்டேன். அப்போது நான் மூன்று தெரு தள்ளி இருந்த என் வீட்டில் இருந்தேன். பிருந்தா என்பவர் எதிரியின் தங்கை. 27 ஆம் தேதி எனது தம்பியான செங்கேனியின் மகன்

சத்தியா எனக்கு போன் செய்து வீட்டில் சண்டை என்றும் அம்மாவையும் தங்கச்சியையும் அடிக்கிறார்கள் வா என்று சொன்னார். இரவு 07.30 மணிக்கு நான் எனது சித்தி வீட்டிற்கு போனேன். செந்தில்குமாரும் அவரது தங்கை ஜெயபிருந்தாவும் ஜெயபிருந்தாவின் கொழுந்தனாரும் எனது சித்தி செங்கேனியையும் ஜெயப்பிரியாவையும் என் சித்தி வீட்டு வாசலில் மூவரும் அடித்தார்கள். அப்போது நானும் எனது சித்தப்பா சரவணனும் அடிக்காமல் தடுத்தோம். அப்போது நான் கேட்டதற்கு உங்கள் குடும்பத்தை அடித்து கெடாசி விடுவேன் என்று ஆஜர் எதிரி செந்தில் சொன்னார். எனது தங்கச்சி ஜெயப்பிரியாவை கடத்தி விடுவேன் என்று ஆஜர் எதிரி செந்தில் சொன்னார். அதன்பிறகு சண்டை வரும் என்று நினைத்து என் சித்தி செங்கேனி வீட்டிலேயே நான் இரவு தங்கிவிட்டேன். அதன்பிறகு 28ஆம் தேதி எதுவும் பிரச்சனை இல்லை. 29 ஆம் தேதி நான் மதியம் எனது வீட்டிற்கு போய்விட்டேன். எனது சித்தியின் மகள் ஜெயப்பிரியாவை ஸ்கூலில் இருந்து அழைத்து வருவதற்காக சென்று அழைத்துக்கொண்டு சித்தி வீட்டிற்கு 05.00 மணிக்கு வந்தேன். ஜெயப்பிரியா வீட்டிற்குள் சென்றுவிட்டார். நான் வெளியே நின்று கொண்டிருந்தேன். உடனே எனது சித்தியின் மகள் ஜெயப்பிரியா என்னிடம் வந்து அம்மா மருந்து குடித்துவிட்டார்கள் சீக்கிரம் வா என்று சொன்னார். நான் சென்று ஆட்டோவை கூட்டி வந்தேன். எனது சித்தி என்னிடம் ஆஜர் எதிரி செந்தில் தன்னை தேவுடியா நீ ஏன் உயிரோடு இருக்கிறாய் மருந்து குடித்து செத்துவிடு என்று சொன்னதாக சொன்னார். எனக்கு அசிங்கமாக இருக்கிறது என்றும் நான் மருந்து குடித்து விட்டேன் என்றும் சொன்னார். செந்தில் மிரட்டியதால் என்ன செய்வது என்று எனக்கு தெரியவில்லை. மருந்து குடித்துவிட்டேன் என்று சொன்னார். தங்கச்சியையும் தம்பியையும் பார்த்துக்கொள் என்று சொன்னார். அதன்பிறகு நாங்கள் பண்ருட்டி ஜிஎச்–ற்கு நானும் எனது சித்தியும் தங்கை ஜெயப்பிரியாவும் போனோம். பண்ருட்டி ஜிஎச்–ல் எனது சித்தி வாந்தி எடுத்தார். எனது சித்தப்பாவிற்கு எனது சித்தி மகள் ஜெயப்பிரியா போன் செய்தார். எனது சித்தப்பா சரவணனும் துணிக்கு போடும் ஆலா என்ற திரவத்தை குடித்துவிட்டு பண்ருட்டி ஆஸ்பித்திரிக்கு வந்தார். அதன்பிறகு

பண்ருட்டி ஆஸ்பித்திரியில் இங்கு முடியாது கடலூர் ஜிஎச்–ற்கு எனது சித்தியை கூட்டிச்செல்லுமாறு சொன்னார்கள். ஆம்புலன்சில் எனது சித்தியையும் சித்தப்பாவையும் கடலூர் ஜிஎச்–ற்கு கூட்டிச்சென்றோம். பண்ருட்டி ஜி.எச் வாசற்படி அருகில் செல்லும்போது எனது சித்தி இறந்துவிட்டதாக சொல்லி திரும்பி பண்ருட்டி ஆஸ்பித்திரிக்கு கொண்டு வந்து விட்டார்கள். எனது சித்தப்பாவிற்கு பண்ருட்டி ஜிஎச்–லேயே சிகிச்சை அளித்தார்கள். அதன்பிறகு நான் எனது தம்பியையும் தங்கையையும் கூட்டிக்கொண்டு வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டோம். போலிசில் நானும் ஜெயப்பிரியா, சித்தப்பா குணாவும் எனது அண்ணன் சசியும் சித்தப்பா சரவணனும் 30 ஆம் தேதி பண்ருட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சரவணன் எனது அப்பாவின் தம்பி என்றால் சரிதான். சரவணன் வீட்டில் இருந்து எனது வீடு மூன்று தெரு தள்ளி உள்ளது. எனது சித்தி இறந்த சமயத்தில் நான் என்ன வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் வேலைக்கு செல்லாமல் வீட்டில் தான் இருந்தேன். எனது சித்தப்பா சரவணன் பழக்கடை வைத்திருந்தார். ஆஜர் எதிரி செந்திலை நான் எத்தனை முறை பார்த்திருக்கிறேன் என்றால் இந்த சண்டை அப்போது தான் பார்த்தேன். ஆஜர் எதிரியின் பெயரே எனக்கு அப்போது தான் தெரியும். எனது தங்கை ஜெயப்பிரியா சொல்லி தெரியும். வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2, 3 முறை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது 26.09.2021 அன்று எனது சித்தி செங்கேனியை ஜெயபிருந்தா திட்டியதாக யார் சொல்லி கேள்விப்பட்டதாக சொன்னேன் என்று கேட்டால் எனது சித்தி செங்கேனி மற்றும் எனது தங்கை ஜெயப்பிரியா ஆகியோர் சொன்னதாக சொன்னேன். போலிசார் என்னை விசாரிக்கும்போது 27.09.2021 ஆம் தேதி வீட்டில் சண்டை நடப்பதாக எனது சித்தி மகன் சத்தியா எனக்கு போன் செய்து சொன்னதாக முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை நான்

சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை விசாரிக்கும்போது நான் 27.09.2021 ஆம் தேதி எனது சித்தி வீட்டிற்கு நேரில் சென்று பார்த்தபோது எதிரியும் குமரேசனும் ஜெயபிருந்தாவும் எனது சித்தியையும் சித்தி மகள் ஜெயப்பிரியாவையும் அடித்ததை பார்த்தேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரி ஜெயப்பிரியா கடத்தி விடுவதாக சொன்னதை நான் காதில் கேட்டதாக போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது சித்தியிடமும் சித்தப்பாவிடமும் 26.09.2021, 27.09.2021 ஆகிய தேதிகளில் எதிரி மற்றும் ஜெயபிருந்தா, குமரேசன் ஆகியோரால் பிரச்சனை நடக்கிறது என்பதால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சொல்லி சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் இருக்கும் இடத்திற்கும் பண்ருட்டி காவல்நிலையத்தில் எவ்வளவு தூரம் என்றால் 10 நிமிடத்தில் செல்லும் தூரம். ஜெயப்பிரியாவும் அவருடைய அப்பா சரவணனும் எதிரியால் ஏற்பட்ட பிரச்சனை குறித்து காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தபோது எனது சித்தி வீட்டிற்கு காவலாக இருந்த நான் 29.09.2021 ஆம் தேதி என் சித்தி மருந்து குடிப்பதற்கு முன்பு எங்கு சென்றேன் என்ற விஷயத்தை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எனது சித்தி செங்கேனி செல்போன் வைத்திருந்தாரா என்றால் வைத்திருந்தார்.அந்த சமயத்தில் நானும் செல்போன் வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன். அந்த சமயத்தில் எனது சித்தப்பாவிடம் செல்போன் இருந்ததா என்றால் இருந்தது. எனது சித்தியிடம் இருந்த 29.09.2021 அன்று எனக்கு அவர் மருந்து குடிப்பதற்கு முன்பு செல்போனில் தகவல் வந்ததா என்றால் இல்லை. எனது சித்தப்பா சரவணனுக்கு எதிரி மிரட்டியது சம்மந்தமாக எனது சித்தி போன் செய்தாரா என்று நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. ஜெயப்பிரியாவும் நானும் ஸ்கூலில் இருந்து வந்தபிறகு முதலில் ஜெயப்பிரியா வீட்டிற்குள் சென்று பார்த்துவிட்டு என்னிடம் சித்தி மருந்து குடித்துவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னார். எனது சித்தியை ஆட்டோவில் ஏற்றும்போது தான் எனது சித்தி ஒரு நபர் திட்டியதாகவும் மருந்து குடித்ததாகவும் சொன்னாரா என்றால் ஆமாம்.

போலிசார் என்னை விசாரித்தபோது எனது சித்தப்பா ஏன் ஆலா திரவத்தை குடித்தார் என்று சொன்னேனா என்றால் சொல்லவில்லை. ஆட்டோவில் செல்லும்போது எனது சித்தி என்னிடம் மருந்து குடித்த விவரத்தை சொன்னார் என்பதை நான் போலிசாரிடம் விசாரணையின்போது சொன்னேனா என்றால் சொன்னேன். நானும் எனது தங்கை ஜெயப்பிரியாவும் எனது சித்தி செங்கேனியை பண்ருட்டி மருத்துவமனையில் கொண்டு சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது சித்தி செங்கேனி தான் ஏன் மருந்து குடித்தார் என்ற விவரத்தை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது சித்தி என்னிடம் சொன்னதாக நான் பின்னிட்டு வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியும் மற்றவர்களும் எதற்காக எனது சித்தியை அடிக்கும் அளவிற்கு சண்டை நடந்தது என்பது பற்றி போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் இல்லை. எனது சித்தியின் குடும்ப பிரச்சனை காரணமாகதான் சித்தி மருந்து குடித்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது சித்தியை பண்ருட்டி ஆஸ்பித்திரிக்கு நான் கூட்டிச்செல்லவில்லை என்றும் எனது சித்தப்பா சரவணன் தான் எனது சித்தியை கூட்டிச்சென்று சேர்த்தார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது சித்தப்பபாவிற்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் அதனால் எங்கள் சித்தியின் குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றும் அதனால் எனது சித்தி மருந்து குடித்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு பயந்து தான் எனது சித்தப்பா ஆலா திரவம் எடுத்து குடித்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்ட காரணத்தினால் என் சித்தி மற்றும் என் சித்தப்பா ஆகியோர் தங்களுடன் நன்றாக பழகிய ஜெயபிருந்தாவிடம் கடன் கேட்டார்கள் என்றும் அதற்கு அவர் தன் கணவர் டிரைவர் வேலை தான் பார்க்கிறார் அவரால் பணம் தரமுடியாது என்றும் வேண்டுமென்றால் தன்னுடைய அண்ணன் செந்தில்குமாரை கேட்டு சொல்கிறேன் என்றும் செந்தில் குமாரை கேட்டபோது அவரிடம் பணம் இல்லை என்று சொன்னார் என்றும் அதனால் தான் செந்தில்குமார் மீது பொய் புகார் கொடுத்து ஜெயபிருந்தா தான் எனது

சித்தியை அடித்தார் என அ.சா.1 பொய்யாக புகார் கொடுத்து அ.சா.1–க்கு ஆதரவாக நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.03 )

2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.